பக்கங்கள் 13+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 08 திங்கட்கிழமை 23.12.2024 | அதிர்வு 144

## வடமராட்சி கிழக்கில் கவிழ்ந்த நிலையில் கரையொதுங்கிய படகு



யாழ். வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பகுதியில் படகொன்று கவிழ்ந்த 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கேப்பாப்பிலவு படை முகாமில் 103 மியன்மார் அகதிகளையும் தடுத்து வைப்பதற்கு அரசு முடிவு

## மிரிஹானவுக்குப் புறப்பட்டவர்கள் ஹபரணையில் திருப்பப்பட்டனர்

(பா.சதீசன்)

கடந்த வாரம் முல்லைத் தீவு மீனவர்களினால் கடலில் மீட்கப்பட்ட மியன்மார் நாட்டு அகதிகள் 103 பேர் முல்லைத் தீவு - கேப்பாப்பிலவு விமானப் படைத் தள முகாமில் தடுத்து வைக்கப்படுவதற்காக இன்று மாலை 5 மணியளவில் அங்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களை மிரிஹானவிலுள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைத்திருப்பதற்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. அதன் பிரகாரம் இவர்களை மிரிஹானவுக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் அவர்கள் திருகோணமலையிலிருந்து அங்கு செல்வதற்கு 03

# குட்டித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் 7 ஆம் திகதி சபையில் முன்வைப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஜனவரி 7 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஜனவரி 10 ஆம் திகதி வரை சபை அமர்வுகள் இடம்பெறும்.

இதன்படி ஜனவரி 7 ஆம் திகதி துறைசார் அமைச்சரால் மேற்படி சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ளது எனவும், ஏதேனும் சிக்கல் ஏற்படின் 10 ஆம் திகதிக்குள் அது 03



# ஓமந்தை பொலிஸ் அதிரடி பெண் உட்பட 5 பேர் கைது

**(கி.வசந்தன்)**

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் ஒரு பெண் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ருந்த திறந்த பிடியாணையின் கீழ் ஒருவரும், திகதியிடப்பட்ட பிடியாணையின் கீழ் நான்கு பேரும் என ஐந்து பேர் கைது செய்யப்ப

## முதலாம் பக்கத் தொடர்ச்சி



**வடமராட்சி கிழக்கில்...**

நிலையில் கரையொதுங்கியுள்ளது.

உடுத்துறை, ஐந்தாம் பனையடிப் பகுதியிலேயே இன்று திங்கட்கிழமை காலை OFRP-6224JFN என்னும் இலக்கமுடைய குறித்த படகு கரையொதுங்கியுள்ளது.

இயந்திரமற்ற நிலையில் அந்தப் படகு கரையொதுங்கி இருப்பதனால், கடத்தல்காரர்கள் பயன்படுத்திய படகாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ள நிலையில், படகின் இலக்கத்தைக் கொண்டு, படகின் உரிமையாளரின் விவரத்தை அறியும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியாவில் கைக்குழந்தைகளை பயன்படுத்தி ஊதுபத்தி வியாபாரம்

## மௌனம் காக்கும் அதிகாரிகள்




(கி.வசந்தன்)

வவுனியா நகரில் வெளிநாட்ட வர்களையும், பொதுமக்களையும் அசௌகரியப்படுத்தி கடைத் தொகுதி, வீதிகளில் கைக் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுடன் ஊதுபத்தி விற்பனை செய்பவர்கள் தொடர்பில் அதிகாரிகள் அல்லது பொறுப்பு வாய்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஊதுபத்தி விற்கும் பெண்களின் தொல்லை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும், ஊதுபத்தி விற்பது போல் பெண்களை வசியப்படுத்தி நகை களைப் பறிக்க முயற்சி செய்வதாகவும் குற்றஞ்சாட்டுகின்றனர்

இவர்கள் ஒரு குழுவாகவே வெளி யிடங்களில் இருந்து வருகை தந்து கைக்குழந்தையுடன் அமர்ந்து இருக் கின்றனர். அதிகமானவர்கள் கர்ப்பி ணிப் பெண்களாகவும் பாலூட்டும் தாய்மார்களாகவும் உள்ளனர். இதில் சிறுமிகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஊதுபத்தி விற்பனை செய்யும்போது ஊதுபத்தியைப் பார்த்து விட்டு வாங்குவதற்குத் தவறும் பட்சத்தில் பொதுமக்களையும், வெளிநாட்டவர்க ளையும் தகாத வார்த்தைகளால் அவதூறா கப் பேசுவது உள்ளிட்ட செயல்களில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் நகர சபையினர் மற்றும் பொலிஸார், சிறு வர் பாதுகாப்புப் பிரிவு, மாவட்ட செயல கம் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த சகலருக்கும் தெரிந்திருந்தும், தெரியப் படுத்தியிருந்தும் எந்தவொரு நடவடிக்கை யும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இவ்வாறான நடவடிக்கைகளினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

எனவே, பொறுப்பு வாய்ந்தவர்கள் இனிவரும் காலங்களில் இந்த விட யத்தில் அக்கறை செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிணற்றுக்குள் வீழ்ந்து வயோதிபப் பெண் சாவு

யாழ்ப்பாணம், நாவற்குழிப் பகுதி யில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து வயோதிபப் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ஏ 9 வீதி நாவற்குழிப் பகுதியில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவர் வீட்டுக் கிணற்றில் நேற்று நீர் அள் ளும்போது தவறி கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான விசார ணைகளை கொடிகாமம் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி முன்னெடுத் தார்.

மேலும் சாவகச்சேரி ஆதார மருத் துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி யின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் வயோதிபப் பெண்ணின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கேப்பாப்பிலவு...**

வாகனங்களில் ஏற்றப்பட்டனர். எனினும், மிரிஹான தடுப்பு முகாமில் அவர்களை வைத்து பேணுவதற்கான வசதிகள், உரிய நிதி ஏற்பாடுகள் இல்லை என்று தெரி விக்கப்பட்டதனால் அவர்கள் இடைவழி யில் திரும்பி திருகோணமலைக்குக் கூட்டி வரப்பட்டு, திருகோணமலை ஜமாலியா பாடசாலையில் தொடர்ந்து தங்க வைக் கப்பட்டிருந்தனர்.

மீண்டும் இன்று காலையில் அவர்கள் இரண்டு பஸ்களில் ஏற்றப்பட்டு மிரி ஹானவுக்கு என அழைத்துச் செல்லப் பட்டனர். இடைவழியில் மிஹிந்தலை – ஹபரண பகுதியில் அவர்கள் பயணித்த பஸ்கள் இடைநிறுத்தப்பட்டன. மிரிஹான வுக்கு அவர்களை அழைத்து வர வேண் டாம் என்ற உத்தரவு பஸ் பொறுப்பாளர் களுக்குக் கிடைத்தது.

இதனையடுத்து திருகோணமலை துறைமுகப் பொலிஸார் திருகோண மலை நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் இன்று முற் பகல் நகர்த்தல் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து, அந்த அகதிகளை முல்லைத்தீவு – கேப்பாப்பிலவு விமானப் படைத் தளக் கட்டளை அதிகாரியிடம் கையளிப்பதற் கான உத்தரவைப் பெற்றனர்.

அந்த உத்தரவுப் பத்திரம் இன்று பிற்பகல் மோட்டார் சைக்கிள் மூலம் எடுத்து விரையப்பட்டு, ஹபரண பகுதியில் நிறுத் தப்பட்டிருந்த அகதிகளின் பஸ்களின் பொறுப்பாளர்களுக்கு வழங்கப்பட் டது.

அதனையடுத்து அந்த அகதிகளை முல்லைத்தீவு – கேப்பாப்பிலவு விமானப் படைத் தள முகாமில் தடுத்து வைத்திருப் பதற்காக அந்தப் படைத் தள முகாம் கட்டளை அதிகாரியிடம் கையளிப்பதற்கு அவர்கள் இன்று மாலை அழைத்து வரப்பட்டுள்ளனர்.

**குட்டித் தேர்தல்...**

சமர்ப்பிக்கப்படவுள்ளது எனவும் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக் காக ஏற்கனவே கோரப்பட்டிருந்த வேட்பு மனுக்களை நிராகரித்தது, புதிதாக வேட்புமனுக்களைக் கோரும் வகை யிலேயே சட்ட திருத்தம் வரவுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத் தில் இடம்பெறும் என்பது குறிப்பிடத் தக்கது.

# விசேட அதிரடிப் படையால் கசிப்பு நிலையம் முற்றுகை!

## சந்தேக நபர் ஒருவர் கைது!!



(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ் )

அம்பாறை மாவட்டம் சவளைக்கடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீரச்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு பின் பக்கம் உள்ள பகுதியில் பல காலமாகச் சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் சனிக்கிழமை (21) இரவு சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினரால் முற்றுகையிடப்பட்டது.

சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சூட்சுமமான முறையில் இயங்கி வந்த இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டுபிடிக்கப் பட்டது. சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த சம்மாந்துறை, வீரமுனை 03 பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 80 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பு, ஒரு லட்சத்து 70 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா, ஒரு லட்சத்து 30 ஆயிரம் மில்லி லீற்றர் வடி, 210 லீற்றர் இரும்பு பரள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன. சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிக பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர் சவளைக்கடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சவளைக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கைது நடவடிக்கை சம்மாந்துறை விசேட அதிரடிப்படை உப பொலிஸ் பரிசோதகர்களான எம்.ஜி.ஏ.கே. ஜெயஸ்ரீ மற்றும் ஓ.வி.கே.டி. விஜயஸ்ரீ, விசேட அதிரடிப் படை சார்ஜன் ரத்னாயக்க, சார்ஜன் வஸ்நாயக்க, சார்ஜன் சதுரங்க விசேட அதிரடிப் படை பொலிஸ் உத்தியோகத்தர்களான பண்டார, சேனாநாயக்க, குமார, பண்டார விசேட அதிரடிப் படை சாரதி குமார ஆகியோரால் முன்னெடுக்கப் பட்டுள்ளது.





# 7 லட்சத்து 85 ஆயிரம் ரூபா வெள்ள நிவாரண உதவி சந்நிதியான் ஆச்சிரமத்தால் உரும்பிராய் மக்களுக்கு

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உரும்பிராய் தெற்கு பிரதேசத்தில் உள்ள ஜே - 265 கிராம சேவையாளர் பிரிவான யோகபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 157 குடும்பங்களுக்கு, 7 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசிய மான உணவுப் பொருள்கள் யோகபுரம் அண்ணா சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணியளவில் அண்ணா சனசமூக நிலைய தலைவர் ச.ரவீன்ராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த உதவித் திட்டத்தைச் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள், அவர்களின் தொண டர்களுடன் நேரடியாகச் சென்று வழங் கினார். மருத்துவர் செந்தில்குமரனும் கலந்துகொண்டார்.











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அகதிகள் அவலம்

'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை' போல இலங்கையை வந்தடைந்த ரோஹிங்கியா அகதிகளின் நிலைமை பேரவலமாக இருக்கின்றது.

பல தலைமுறைகளாக ரோஹிங்கியர்கள் மியான்மர் நாட்டில் வாழ்ந்தாலும், அவர்களை அந்த நாடு குடிமக்களாக அங்கீகரித்துப் பேணவில்லை. அவர்களை அடிமைப்படுத்தி, இன ரீதியாகச் சிதைத்தழிப்பதில் அந்த நாட்டின் இராணுவ ஆட்சிப்பீடம் முனைப்புடன் உள்ளது.

அதனால் தப்பிப் பிழைத்து, பாதுகாப்பான வாழ்வு தேடி மூன்று படகுகளில் புறப்பட்டவர்களே இலங்கையை வந்தடைந்து இங்கும் பேரவலப்படும் - வீணே அலைக்கழிக்கப்படும் - கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

தமது நாட்டிலிருந்து இலங்கையில் தஞ்சம் பெறுவதற்கு எனப் புறப்பட்டு வந்தவர்கள் அல்லர் அவர்கள். வேறு வழியின்றி, உயிர்ப் பாதுகாப்புக்காக, கிடைத்த படகுகளில் ஏறிப் புறப்பட்டவர்களே கடலில் பேரவலப்பட்டு இலங்கைக் கரைக்கு அடித்து வரப்பட்டார்கள் என்பதே உண்மை.

"நாங்கள் மூன்று படகுகளில் நாட்டை விட்டு வெளியேறினோம். அவற்றில் இரண்டு பழுதடைந்தன. அந்த இரண்டு படகுகளில் இருந்தவர்கள் எங்கள் படகில் ஏறினர். வரும் வழியில், எங்கள் சக பயணிகளில் ஆறு பேர் - அவர்களில் நால்வர் குழந்தைகள் - இறந்தனர். உடல்கள் கடலில் வீசப்பட்டன" என்று அந்த அகதிகளில் ஒருவர் தங்கள் சோகக் கதையைக் கூறினார்.

இவர்களின் நிலைமை தமிழக மீனவர் பிரச்சினை போன்றது அல்ல. விரும்பி இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் புகுந்தவர்கள் அல்லர் இவர்கள். ஆகையினால் இவர்கள் விடயத்தை தமிழக மீனவர் விடயங்களைக் கையாளும் முறைமையில் மேற்கொள்வது தவறு. இந்த அகதிகளை ஏற்றி வந்த படகோட்டிகளை தமிழக மீனவர்களின் படகோட்டிகளை கையாள்வது போன்று சட்டத்தால் கையாள முயல்வது முறையற்றது.

அந்தப் படகோட்டிகள் தவிர எஞ்சியுள்ள 115 ரோஹிங்கிய அகதிகளுக்கு (ஒரு கர்ப்பிணி உட்பட 29 பெண்கள், 39 ஆண்கள் மற்றும் குழந்தைகளுக்கு) ஏற்பட்டுள்ள நிலைமை மிக மோசமானது.

அவர்களை மிரிஹான தடுப்பு முகாமில் வைத்திருப்பதற்கான உத்தரவை திருகோணமலை நீதிமன்றம் முதலில் வழங்கியிருந்தது. அதற்காக அழைத்துச் செல்லப்பட்ட அவர்கள் பின்னர் நடுவழியில் திரும்பி அழைத்து வரப்பட்டு, திருகோணமலை ஜமாலியா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இன்று காலையில் அவர்கள் மிரிஹானவுக்கு என அழைத்துச் செல்லப்பட்டபோதும் வழியில் ஹபறணையில் நிறுத்தப்பட்டனர். மிரிஹானவில் அவர்களை பேணுவதற்கான வசதிகள், நிதி மற்றும் ஏற்பாடுகள் இல்லை என்று அதற்குக் காரணம் தெரிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து அவர்களை முல்லைத்தீவு இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்வதற்கான கட்டளை திருகோணமலை நீதிமன்றத்தில் பெறப்பட்டு அவர்கள் முல்லைத்தீவு முகாமுக்கு இப்போது திருப்பிவிடப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி இன்று பிற்பகலில் கிடைத்திருக்கின்றது.

மியன்மாரில் பௌத்த ஆட்சி பீடத்தினால் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டு, துரத்தப்பட்ட முஸ்லிம்களே இந்த அகதிகள். அதனால்தான் இவர்களுக்கு இத்தகைய அவல உபசரிப்பா? தப்பித்தவறி மறுவளமாக இந்த அகதிகள் பௌத்தர்களாக இருந்திருந்தால் இலங்கை தேசம் இப்படித்தானா இவர்களைக் கையாண்டிருக்கும்?

பேரவலப்பட்டு வரும் அகதிகளை மனிதாபிமான முறையில் கையாள்வது, தன்னை ஒரு சட்டபூர்வமான தேசமாகக் கூறும் இலங்கையின் தார்மீகக் கடப்பாடாகும். அதை நினைவூட்ட விரும்புகிறோம்.

# துறைசார் வல்லுனர்களின் உதவியுடன் வெள்ளப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்

## சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் தர்ஷன் சுட்டிக்காட்டு

(த.சுபேசன்)

துறைசார் வல்லுனர்களுடைய உதவியோடு தென்மராட்சிப் பிரதேசத்தின் வெள்ளப் பிரச்சினையை முறையாகத் தீர்க்க வேண்டும் எனச் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினரும் கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளருமான க.தர்ஷன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கோவிற்குடியிருப்பு கிராமத்தில் இடம்பெற்ற கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவின் பின்னர் அவர் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அண்மையில் பெய்த கனமழை காரணமாகத் தென்மராட்சியின் பல கிராமங்கள் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டிருந்தன.



வாய்க்கால்களை மறித்து கட்டப்பட்டிருக்கும் சட்டவிரோத கட்டடங்களே இந்த அனர்த்தத்துக்கு முக்கிய காரணி எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்விடயத்தில் துறைசார்ந்த வல்லுனர்களுடைய ஆலோசனையைப் பெற்று வெள்ள அனர்த்தத்தில் இருந்து பிரதேசத்தை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக தென்மராட்சியின் கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் உள்ள உப்புக்கேணிக் குளம் நீண்ட காலமாக புனரமைப்பு இன்றிக் காணப்படுவதால் வருடா வருடம் அப்பகுதி மக்கள் வெள்ளப் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர்.

எனவே குளத்தை ஆழப்படுத்திப் பாதுகாப்புச் சுவர் அமைத்து மேலதிக நீரை வாய்க்கால் ஊடாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தென்மராட்சியின் மகிழங்கேணி கிராம மக்கள் கடல் பெருக்கால் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவே கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும் முகமாக கடல் நீர் தடுப்பணை அமைக்கப்பட வேண்டும்.

அத்தோடு வெள்ள இடர் காலத்தில் வெள்ள நீரைக் கடத்த தற்காலிக ஏற்பாடாக வீதிகள் மற்றும் காணிகள் ஊடாக தோண்டப்பட்ட வாய்க்கால்கள் அனைத்தையும் வெள்ளப் பாதிப்பு குறைந்ததும் உரிய திணைக்களங்கள் நிரவி போக்குவரத்தை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

# தனங்களப்பில் சட்ட விரோதமாக தறிக்கப்படும் பனை மரங்கள்!

## முறைப்பாடுகள் வழங்கக் கோரிக்கை

யாழ். சாவகச்சேரி தனங்களப்புப் பகுதியில் சட்டவிரோதமாக பனை மரங்கள் தொடர்ச்சியாக தறிக்கப்பட்டு வந்த நிலையில் பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து பனை அபிவிருத்தி சபை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் தெரிவிக்கையில்,

தனங்களப்புப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத பனை மரங்கள் வெட்டப்படுகின்றன என்று பனை அபிவிருத்திச் சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

முறைப்பாட்டின் அடிப்படையில் உத்தியோத்தர்கள் குறித்த இடத்துக்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் அங்கு 25 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கனகர இயந்திரங்கள் குறித்த பகுதியில் கொண்டுவரப்பட்டமையும் நேரடியாக அவதானிக்கப்பட்டது.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால் இள வயது பனைகள் பல தறிக்கப்பட்டும் அடிப்பாகங்கள் எயியூட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடியைச் சேர்ந்த காணி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு பொலிஸார் வழக்கு தாக்கல் செய்வதாக உறுதியளித்தனர்.

பனை மரங்களை வெட்டுவதற்காக எடுத்துவரப்பட்ட கனகர இயந்திரங்களை முறைப்பாட்டில் பதிவு செய்யுமாறு எமது உத்தியோகத்தர்கள் வலியுறுத்திய நிலையில் சாவகச்சேரி பொலிஸார் ஏற்க மறுத்துள்ளனர்.

இந்த சட்ட விரோத செயற்பாடுகளுடன் சாவகச்சேரி பொலிசாருக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகம் எழுந்த நிலையில் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாகன இலக்கங்களை முறைப்பாட்டில் பதியாவிட்டால் மேலிடத்தில் முறைப்பாடு செய்ய வேண்டி வரும் எனக் கூறினோம். இந்த நிலையில் முறைப்பாட்டை ஏற்பதாக தெரிவித்துள்ளனர்.

சட்ட விரோத பனை மரங்கள் தறிக்கப்பட்டால் 77 927 3042 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை தர முடியும் என பனை அபிவிருத்திச் சபை தலைவர் மேலும் தெரிவித்தார்.


GSM GUNAAM'S SUPERMARKET
குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சாய்ந்தமருது தாமரைக்குளம் சுத்திகரிப்பு பணிகள் ஆரம்பம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது தாமரைக் குளத்தில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றி, அதனைச் சுத்தம் செய்யும் வேலைத் திட்டம் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவின் அவசர வேண்டுகோளின் பேரில் கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சாய்ந்தமருது வைத்தியசாலை, மல்ஹர் சம்ஸ் பாடசாலை மற்றும் பொது நூலகம் என்பவற்றுக்கு பின்னால் அமைந்துள்ள இந்தக் குளமானது இந்தப் பிரதேசத்தின் வெள்ள நீரை உள்வாங்கி, வாய்க்கால் ஊடாகக் கரைவாகு பிரதான குளத்துக்கு அனுப்புகின்ற ஒரு முக்கிய நீர் நிலையாகக் காணப்படுகிறது.

எனினும் சல்பீனியாக்கள் மற்றும் குப்பை கூழங்களாலும் புதர்களாலும் இதன் இயற்கைத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்கும் அச்சுறுத்தலாக காணப்படுவதால் வெள்ள அனர்த்தத்துக்கு முகம் கொடுக்கும் வகையில் இதனை அவசரமாக சுத்திகரிப்பு செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.



இதற்கு அமைவாக அதிகாரிகள் சகிதம் அவர் அங்கு கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரடியாக அவதானித்து, இந்தப் பிரச்சினையை உடனடியாக கல்முனை மாநகர ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தார்.

இதையடுத்து இக்குளத்தில் தேக்கமடைந்திருந்த சல்பீனியாக்கள், புதர்கள் மற்றும் திண்மக் கழிவுகளை அகற்றும் பணிகள் கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# நோன்புக் காலத்தில் சாதாரண தர பரீட்சை நடத்துவது அசௌகரியம்!

### அரசும், முஸ்லிம் எம்.பிக்களும் இதில் கவனம் செலுத்தக் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையை மார்ச் மாதம் நடுப் பகுதியில் நடத்த பரீட்சை திணைக்களம் தீர்மானித்துள்ளது. இந்த வேளையில் அந்தக் காலமானது முஸ்லிங்களின் புனித நோன்பு காலமாக அமைந்துள்ளது. அதனால் இந்தப் பரீட்சையை நோன்பு ஆரம்பிக்க முன்னர் அல்லது நோன்பு பெருநாள் முடிந்த பின்னர் நடத்த அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு அல்– மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீ லங்கா ஜனாதிபதி, கல்வி அமைச்சராக உள்ள பிரதமர், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றுக்கு கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அல்– மீஸான் பௌண்டேஷனின் கோரிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகில் வாழும் இஸ்லாமியர்களின் புனிதமிகு மாதங்களில் ஒன்றான புனித ரமழான் என்பது அமல்கள் நிறைந்த மாதமாகும். இந்த மாதத்தில் 13 மணித்தியாலயங்களுக்கு மேலாக பகல் நேரங்களில் முஸ்லிங்கள் நோன்பு நோற்றிருப்பர். பகலிலும், இரவிலும் இறைவனை அதிகம் அதிகம் தொழும் மாதம் இது. அருட்கொடைகள் நிறைந்த இந்த மாதத்தில் முஸ்லிங்கள் நிறைய நன்மையான காரியங்களை செய்வதுடன் இரவு நேரத்திலும் நீண்ட நேரம் நின்று தொழும் காலமாகும். இந்த காலத்தில் பள்ளிவாசல்கள் சகலதிலும் மார்க்க சொற்பொழிவுகளும், வணக்க வழிபாடுகளிலும் மக்கள் ஈடுபடுவார்கள்.

இப்படியான சங்கை மிகுந்த காலத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையை நடத்தப் பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்திருப்பது பொருத்தமற்ற செயலாகும். இந்த விடயம் இப்போது முஸ்லிங்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. பரீட்சை எழுதும் முஸ்லிம் மாணவர்களும், பரீட்சைக் கடமைக்குச் செல்லும் முஸ்லிம் உத்தியோகத்தர்களும் நோன்புக் காலங்களில் பரீட்சையை எதிர்கொள்வதும் பரீட்சைக்குத் தயாராவதும் உடலியல் ரீதியாக மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும், மார்க்க கடமைகளிலும் தாக்கம் செலுத்த வாய்ப்புள்ளது.

இதனால் இலங்கையின் தேசிய இனங்களில் ஒன்றான முஸ்லிங்களின் உணர்வுகளை மதித்து இலங்கை முஸ்லிங்களின் மார்க்கக் கடமைகளையும், கல்வி நடவடிக்கைகளையும் திருப்திகாரமாக முன்னெடுக்க இந்த பரீட்சை நேரசூசியில் மாற்றத்தை ஏற்படுத்த அரசும், குறித்த துறைக்கு பொறுப்பான திணைக்களங்களும் முன்வரவேண்டும். முஸ்லிம் கட்சிகள், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தைப் பிரநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் கரிசனை செலுத்த வேண்டும்.– என்றுள்ளது.









# மாகாண இலக்கிய விழா போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான விருதுகள்

**(எம்.ஏ.றமீஸ்)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் மாகாண இலக்கிய விழாவை முன்னிட்டு இந்த மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் சேவையாற்றும் கலை இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள உத்தியோகத்தர்களுக்கு இடையே நடத்தப்பட்ட படைப்பாக்கல் போட்டிகளின்போது வெற்றியீட்டியவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (22) களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது பல்வேறுபட்ட துறைசார் உயர் அதிகாரிகள் இலக்கியத் துறை அதிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது மாகாண மட்டத்தில் புகைப்படக் கலைத் துறைப் போட்டியில் முதலிடம் பெற்ற அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஆசிரியராகச் சேவையாற்றிவரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிறை எப்.எம். அறிவிப்பாளருமான எம்.ஏ.றமீஸ் முதலாமிடம் பெற்றமைக்கான விருதைப் பெற்றுக் கொண்டார். புதுக் கவிதைப் போட்டியிலும் வெற்றி பெற்று பரிசில்களையும் பெற்றுக் கொண்டார். இலக்கியத் துறையில் அதிக ஈடுபாடு காட்டி வரும் இவர் அரச வானொலி விருது, மாகாண இளங்கலைஞர் விருது உள்ளிட்ட பல்வேறு தேசிய மற்றும் மாகாண விருதுகள் பலவற்றை பெற்றுள்ளார்.



# கல்முனையில் இரத்ததான முகம்!

**(எஸ்.அஷ்ரப்கான், நிப்ராஸ் லத்தீப், நூருல் ஹுதா உமர்)**

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஏற்பட்டிருக்கும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் தஃவா குழு இணைந்து மாபெரும் இரத்ததான முகமை பள்ளிவாசல் தலைவர் ஏ.எம்.இப்றாஹீம் தலைமையில் நடத்தின.

இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாகத் தெற்குப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.எப்.ஸஹ்றா ஸறாப்டீன், கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.றம்ஸீன் பக்கீர், அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி வித்யா, கல்முனை 09 ஆம் பிரிவுக் கிராம சேவகர் எம்.ஏ.றஹ்னா, வைத்திய அதிகாரி டாக்டர் சுபோதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு பிரதம அதிதி டாக்டர் எஸ்.எப்.ஸஹ்றா ஸறாப்தீன் உரையாற்றும் போது,

எமது பிரதேச வைத்தியசாலைக்கு ஏற்பட்டிருக்கும் இரத்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக இவ்வாறான இரத்தக் கொடை நிகழ்வுகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது.

அதிலும் குறிப்பாக ஹுதா பள்ளிவாசல் நிர்வாகம் இதனை ஏற்பாடு செய்தமை வரவேற்கத்தக்கது. இஸ்லாமிய அடிப்படையில் உயிர்களை வாழ வைப்பது ஒரு சமூகத்தை வாழ வைப்பது போன்ற நன்மையைப் பெறக் கூடிய ஒரு செயற்பாடாகும். எனவே, இந்த விடயம் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த முயற்சி வரவேற்கத்தக்கதாகும்.– என்றார்.

இரத்ததான முகாமில் சுமார் 115 குருதிக் கொடையாளர்கள் ஆண்கள், பெண்கள் என கலந்து கொண்டு தங்களது இரத்த தானம் செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் கல்முனை ஹுதா பள்ளிவாசல் செயலாளர் ஏ.பி.எம். தன்ஸீல், உப தலைவர் எஸ்.எச்.நிஹார் ஆகியோர் உட்பட தஃவா குழு தலைவர் மௌலவி ஏ.எம்.சாபித் ரியாதி மற்றும் தஃவா குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.




# மாணவருக்குக் கருத்தரங்கு

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

செந்நெல் மறுமலர்ச்சி அமைப்பானது இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்குத் தொடர்ச்சியான உதவிக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. இந்த வகையில், சம்மாந்துறை அல் அர்சத் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கானது அமைப்பின் அமைப்பாளர் எம்.ஆர்.ஆசிக் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் எம்.என்.எம்.சிபாட் மற்றும் வஜீத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# தேசிய பாடலாக்க போட்டியில் வீரமுனை சுதர்சன் முதலிடம்

(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய பாடலாக்க போட்டியில் அம்பாறை மாவட்டத்தின் வீரமுனையைச் சேர்ந்த அருளானந்தம் சுதர்சன் முதலிடம் பெற்றுள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் உளவள ஆலோசனை உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் அருளானந்தம் சுதர்சன் அலரிமாளிகையில் இடம்பெற்ற தேசிய இலக்கிய விருது விழாவில் அவர் திறந்த பிரிவு பாடலாக்கத்தில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் பெற்று, விருது, சான்றிதழ் மற்றும் காசோலையைப் பெற்றுக்கொண்டார்.

இவர் ஏலவே சம்மாந்துறை பிரதேச செயலகம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகம் மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியிருந்தார்.

தேசிய மட்டத்தில் 25 படைப்புகளில் அருளானந்தம் சுதர்சனது ஆக்கம் முதலிடத்தைப் பெற்றது.



# சுகாதார சேவைகளை மேம்படுத்த உபகரணங்கள் வழங்கி வைப்பு!

(அபு அலா, ஏ.எல்.றியாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட மக்களின் சுகாதார சேவைகளை மேம படுத்தும் நோக்கில் அலுவலகத்துக்குத் தேவையான மிகப் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மிக நீண்ட காலத் தேவையாகக் காணப்பட்டு வந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகிலா இஸ்ஸதீனிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த உபகரணங்களும், தளபாடங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீனின் தலைமையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகிலா இஸ்ஸதீனால் போட்டோ கொப்பி பிரதி எடுக்கும் இயந்திரம் மற்றும் மேசை, கதிரைகள் என்பனவற்றை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சி.எம்.மாஹிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக கச்சத்தீவை மீட்டெடுக்க வேண்டும்

## தீர்மானம் நிறைவேற்றியது தி.மு.க

இலங்கையில் கைதாகியுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக கச்சத்தீவை மீட்க வேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

அந்த கட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகக் கைதுசெய்யப்படுகின்றமை மற்றும் அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றமை என்பன அவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மீனவர்களுக்கு சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப் படுகின்றமையினால் இரு நாடுக ளுக்கு இடையே நிலவும் நல்லுற வுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் திராவிட முன்னேற்றக்கழக செயற் குழு கவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதி




யுடன் இந்தியப் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னர் கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

அதில் மீனவர்கள் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகுவதற்கும், ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை மூலம் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கும் இலங்கை ஜனாதிபதி தமது முதல் பயணத்தின் போதே ஒப்புக்கொண்டுள்ளார்.

இது மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சிறந்த ஆரம்பம் என குறித்த செயற்குழு கருதுவதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் மற்றும் இலங்கை ஜனாதிபதி ஆகியோரின் பேச்சுவார்த்தையினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு ஏதுவாக தமிழக மீனவர்களும், அவர்களது படகுகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

அத்துடன் தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காண்பதற்குக் கச்சத்தீவை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுவில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

# சிறுவர் திருமணம் தொடர்பில் அசாம் மாநிலத்தில் பலர் கைது

இந்தியாவின் - அசாம் மாநிலத்தில் கடந்த இரண்டு நாளகளில் மாத்திரம் சிறுவர் திருமணம் தொடர்பில் 400 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுவர் திருமணம் தொடர்பில் அங்கு கட்டம் கட்டமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அசாம்





மாநில பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த வருடத்தின் பெப்ரவரி மற்றும் ஒக்டோபர் மாதங்களிலிருந்து சிறுவர் திருமணம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. குழந்தை திருமணம் தொடர்பாக அசாம் மாநிலத்தில் இதுவரை 4,814 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

# உத்தரப் பிரதேசத்தில் நடந்த என்கவுன்டரில் மூன்று பிரிவினைவாதிகள் சுட்டுக்கொலை

பஞ்சாபின் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் மூன்று காலிஸ்தானி பிரிவினைவாதிகள், உத்தரப் பிரதேசத்தின் பிலிபித் மாவட்டத்தில் இன்று திங்கள் கிழமை அதிகாலை நடந்த என்கவுன்டரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்ட குர்விந்தர் சிங் (வயது 25), வீரேந்திர சிங் என்ற ரவி (வயது 23), மற்றும் ஜஸ்பிரீத் சிங் என்ற பிரதாப் சிங் (வயது 18) ஆகியோரே இவ்வாறு பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேச பொலிஸார் இணைந்து நடத்திய என்கவுண்டரில் உயிரிழந்துள்ளனர்.

இதன்போது, பிரிவினைவாதிகளிடமிருந்து இரண்டு






ஏகே 47 துப்பாக்கிகள், இரண்டு க்ளோக் பிஸ்டல்கள் மற்றும் பல வகை துப்பாக்கி ரவைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

# காசாவுக்குள் மனிதாபிமான உதவிகள் சென்று சேர்வதைத் தடுக்கும் இஸ்ரேல்








ஒக்டோபரில் இருந்து காசாவுக்கு 12 லொறிகளில் மாத்திரம் உணவு, தண்ணீர் மட்டுமே விநியோகிக்கப்பட்டுள்ளன என ஆக்ஸ்ஃபாம் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டப்பட்ட அறிக்கையில்,

"வடக்கு காசாவுக்குள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட 34 லொறிகளில் கடந்த இரண்டரை மாதத்தில் வெறும் 12 லொறிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன. இஸ்ரேல் இராணுவம் வேண்டுமென்றே காட்டிய கெடுபிடிகளால் உணவு, தண்ணீரை கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளது.

இத்தகைய கெடுபிடிகளால் காசாவில் மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் ஆக்ஸ்ஃபாம் சுட்டிக்காட்டுகிறது.

மேலும், "மனிதாபிமான உதவிகள் கிடைக்காமல் ஆயிரக்கணக்கான மக்கள் தவித்து வருகின்றனர். ஆனால், இஸ்ரேல் இராணுவம் இரக்கமின்றி நடந்து கொள்கிறது. உணவு, தண்ணீர் லொறிகளை எடுத்துச் செல்ல அத்தனை அனுமதியும் கிடைத்த பின்னரும் கூட ஜபாலியாவில் தேவையே இன்றி லொறிகளை தடுத்து நிறுத்துகிறது. மேலும், இராணுவப் பகுதிகளில் உணவு, தண்ணீரை இறக்கி வைக்க ஓட்டுநர்களை நிர்ப்பந்திக்கிறது. கடந்த மாதம் மட்டும் 11 லொறிகள் இவ்வாறாக நிறுத்திவைக்கப்பட்டன." என்று ஆக்ஸ்ஃபாம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேபோல், நியூயோர்க்கை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இஸ்ரேல் அதிகாரிகள் திட்டமிட்டு காசாவுக்கு உணவு, தண்ணீர் கிடைப்பதைத் தடுத்து வருகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கானோர் அங்கே உயிரிழந்துள்ளனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் மேலும் உயிரிழப்புகள் அதிகரிக்கும்" என்று கூறியுள்ளது.

டிசம்பர் 19 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் அந்த அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 அன்று இஸ்ரேல் - காசா ஆகிய இரு நாடுகளில் இருந்து ஒலிக்கத் தொடங்கிய போர் சத்தம் இன்று வரை ஓயவில்லை. இரண்டு நாடுகளின் அதிகார மையங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் தங்களது உயிரை துறந்து வருகின்றனர்.

ஆனால், இன்னும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஹமாஸை அழிக்காமல் ஓயமாட்டோம் என இஸ்ரேல் வீர முழக்கமிட்டு வருகிறது. இஸ்ரேல் தாக்குதலில் இது வரை 45,220 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்று சேர்வதிலும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை மேலும் மோசமடையச் செய் துள்ளது.

இதற்கிடையில் தெற்கு காசாவின் அல் மவாஸியில் உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்ட இடத்தைக் குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 50 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதனால் இஸ்ரேல் - காசா மோதல் சற்றும் தீவிரம் குறையாமல் தொடர்ந்து வருவதாக ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் ஆணையம் கவலை தெரிவித்துள்ளது.






# தெற்கு பிரேஸிலில் தனியார் விமானம் விபத்துக்குள்ளானதில் 10 பேர் பலி

தெற்கு பிரேஸிலின் சுற்றுலா நகரமான கிராமடோவில் தனியார் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

அத்துடன், அதில் பயணித்த விமானத்தின் உரிமையாளர் உள்ளிட்ட 10 பேர் உயிரிழந்தனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் தரையிலிருந்த 17 பேர் காயமடைந்ததுடன், 12 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரேஸிலின் கனெலா விமான நிலையத்திலிருந்து ஜூண்டியாய் பகுதிக்குப் பயணித்த சிறிய ரக விமானம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி விமானம் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், இந்த விபத்துக்கான காரணத்தைக் கண்டறிவதற்கான விசாரணைகளை பிரேஸிலின் வானூர்தி விபத்து விசாரணை பிரிவு ஆரம்பித்துள்ளது.

பக்கங்கள் 02

கனடா முரசு

திங்கட்கிழமை 23/12/2024

## கனடாவில் போலி தாதிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை

கனடாவில் போலியாக தாதியர் சேவையில் ஈடுபட்ட பெண் ஒருவருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

மேற்படி பெண்ணுக்கு 7 ஆண்டுகள் சிறை தண் 02

# கனடிய பிரதமர் பதவி விலக வேண்டுமென ஆளும் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ பதவி விலக வேண்டுமென ஆளும் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆளும் லிபரல் கட்சியைச் சேர்ந்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

ஒன்றாரியோ லிபரல் கட்சியின் உறுப்பினர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்சித் தலைமைப் பதவியிலிருந்து ட்ரூடோ விலக வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பதவி விலக வேண்டு மென்ற கோரிக்கை கட்சிக்கு வெளியிலும் கட்சிக்கு உள்ளேயும் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.






# கனடாவில் கோர விபத்து; இரண்டு பேர் உயிரிழப்பு

கனடாவில் இடம் பெற்ற வாகன விபத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கனடாவின் புருன்பே பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சிக்கிய இருவரை மீட்டு உயிர் காப்பு முயற்சிகள் மீட்கப்பட்ட போதும் அது வெற்றி அளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால், மேற்படி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துடன் தொடர்புடைய ஏனைய வாகன சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு வாகனங்கள் மோதி கொண்டதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# வாகன கொள்ளையுடன் தொடர்புடைய கும்பல் ஒன்று ரொறன்ரோவில் கைது

ரொறன்ரோவின் பியர்சன் விமான நிலையத்தை அண்மித்த பகுதியை மையமாகக் கொண்டு இயங்கி வந்த வாகன கொள்ளை கும்பல் ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த கும்பலைச் சேர்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஐந்து பேரை தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகன கொள்ளை கும்பல் சுமார் நூறு வாகனங்களை கொள்ளை இட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் முதல் இந்த வாகன கொள்ளை சம்பவம் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் நான்கு மில்லியன் தொடர் பெறுமதியான வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் கியூபைக்கை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கியூபெக்கில் மதுபோதையில் வாகனம் செலுத்திய பலர் கைது

கனடாவின் கியூபெக்கில் மது போதையில் வாகனம் செலுத்திய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரே நாளில் 46 பேர் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குளிர்காலத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய வாகன டயர்களை பொருத்தாத மேலும் 150 சாரதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கியூபெக் பொலிஸார் ஒரே நாளில் வீதிகளில் சுமார் 300 சாரதிகளை சோதனை நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த பண்டிகை காலத்தில் கூடுதல் விசாரணைகள், சோதனைகள் நடத்தப்படவுள்ளன என பொலிஸார் அறிவித்துள்ளனர்.



மது போதையில் வாகனம் செலுத்துவது ஆபத்தானது எனவும் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் அதிகம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கனடாவில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனை விதித்துள்ளது.

அந்தப் பெண் பல மாகாணங்களில் தாதியாக சேவையாற்றியுள்ளார்.

எனினும் தாதியர் சேவையில் ஈடுபடுவதற்கான தகுதிகள் எதுவும் இல்லாத நிலையில், அவர் சட்ட விரோதமான முறையில் சேவையில் ஈடுபட்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பெண் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு சேவையை வழங்கியுள்ளார்.

அவருக்கு பிரிட்டிஷ் கொலம்பிய நீதிமன்றம் தண்டனை வகித்துள்ளது. பிரிகேட் கிளாரொக்ஸ் என்ற பெண்ணே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.

